# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.18/2023

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 07.03.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழழகன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | பொன்னுசாமி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நாகப்பன் என்பவர் எனது கிராமத்தில்தான் வசிதது வருகிறார் என்றால் சரிதான். நாகப்பனுடன் உடன் பிறந்தவர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நாகப்பனின் தகப்பனார் பெயர் சீனிவாசன் என்றால் சரிதான். சீனிவாசனுக்கு 4 பெண் குழந்தைகள் 3 ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். பிரதிவாதி முருகேசன் என்பவரும் சீனிவாசனின் வாரிசுகளில் ஒருவரான சாமிநாதனின் மகன் என்றால் சரிதான். சீனிவாசன் என்பவரின் வாரிசுதாரர்கள் எனது கிராமத்தில்தான் வசித்து வருகிறார்கள். சீனிவாசனின் மருமகள்தான் மல்லிகா எ்னறால் சரிதான். மல்லிகாவிற்கும் பிரதிவாதிக்கும் என்ன உறவு என்றால் கொழுந்தனார் மகன் ஆவார். சீனிவாசனுக்கு இரண்டு மனைவிகள் இதில் இரண்டாம் தாரமான சரோஜா உயிருடன் இருக்கிறார். அவர் நான் வாங்கிய மனைக்கட்டில் குடியிருந்து வந்தார். நான் வாங்கியதற்கு பின்னிட்டு எங்கு இருக்கிறார்கள் என்றால் சரியாக தெரியவில்லை.

தாவா சொத்துக்களை நான் உரிய நபர்களிடம் கிரயம் வாங்கவில்லை என்றால் அந்த கிரயம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு உரிமையில்லாத தாவா சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது

என்றால் சரியல்ல. தாவா சொத்து பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.03.11 10:53:36 +0530

District Munsif
Mannargudi.